நிதி ஒதுக்காமல் தமிழ்நாட்டை வஞ்சிக்கும்

ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள்!

அரவக்குறிச்சி பொதுக் கூட்டத்தில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேச்சு!

கரூர், பிப். 12-

பல மடங்கு வரி வசூலித்து விட்டு தமிழ்நாட்டிற்கு பட்ஜெட்டில் நிதி ஒதுக்காமல் வஞ்சித்து, ஏமாற்ற தப்புக்கணக்கு போடும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு மக்கள் தேர்தலில் சரியான பாடம் புகட்டுவார்கள் என அரவக்குறிச்சி கண்டன பொதுக்கூட்டத்தில் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி பேசினார்.

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட தி.மு.க. சார்பில், ஓர வஞ்சனையான நிதி பகிர்வு, ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காமல் அநீதி இழைத்த மோடி அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் அரவக்குறிச்சி பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமை வகித்தார். அரவக்குறிச்சி தொகுதி எம்.எல்.ஏ. வும், க.பரமத்தி மேற்கு ஒன்றியச் செயலாளருமான பிஆர்.இளங்கோ வரவேற்பு உரையாற்றினார். கரூர் மாவட்டக் கழக செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி, தலைமைக் கழக பேச்சாளர்கள் சென்னை த. அரங்கநாதன், நெல்லை ஜான், சிறப்புரையாற்றினர். அமைச்சர் வி.செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார்.

அவர் பேசியதாவது:-

ஒன்றிய அரசு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு நிதி ஒதுக்காததை கண்டிக்கும் வகையில் நடைபெறுகின்ற கண்டன பொதுக்கூட்டமாக மட்டும் இல்லாமல் ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மக்களை தொடர்ந்து வஞ்சித்து வருவதை எடுத்துக் காட்ட வேண்டும், நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்ற வகையில் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டு அதன் அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வஞ்சிக்கும் ஒன்றிய அரசு!

கரூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் அரவக்குறிச்சியில் நடைபெறுகின்ற இந்த மாபெரும் கண்டன பொதுக் கூட்டம் என்பது ஒரு மாநாட்டை போல மிகச் சிறப்பாக எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஒன்றிய அரசானது தான் வசூலிக்கக்கூடிய வரியில் அனைத்து மாநிலங்களுக்கும் நிதியை சரி சமமாக பிரித்து வழங்க வேண்டியது அதன் கடமை பொறுப்பு. ஆனால் அதனைத்தவிர்த்து தங்களுக்கு ஆதரவாக இருக்

கக்கூடிய மாநிலங்களுக்கு கூடுதலான நிதிகளை வழங்குவதும், தாங்கள் ஆட்சி செய்யக்கூடிய மாநிலங்களுக்கு தேவைகளை விட கூடுதலாக நிதிகளை ஒதுக்கீடு செய்வதும் தங்களோடு ஒத்துப்போகாத மாநிலங்களுக்கு கொள்கைகளை கோட்பாடுகளை தாங்கள் நினைக்கின்ற திட்டங்களை செயல்படுத்தாத மாநிலங்களுக்கு அம்மக்களை புறக்கணிக்கின்ற அரசாகவும், ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களை வஞ்சித்து வருகின்றது.

கடந்தாண்டு ஒன்றிய நிதி அமைச்சர் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையானது ஆந்திர மாநிலத்திற்கான ஒரு நிதிநிலை அறிக்கையாக அமைந்தது. இந்த ஆண்டிற்கான பட்ஜெட் பீகாருக்கான பட்ஜெட்டாக ஒன்றிய அரசு அமைத்திருக்கின்றது. அவர்கள் தாங்கிப் பிடிக்கின்றனர். தங்களுடைய ஆட்சியை பா.ஜ.க. அரசை காப்பாற்றிக் கொள்வதற்கு தாங்கிப் பிடிக்கின்ற மாநிலங்களுக்கு கூடுதலான நிதிகளை ஒதுக்குவதையும், தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் அதே குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் தங்களுடைய கொள்கைகளை குறிப்பாக தமிழ்நாட்டு மக்கள் விரும்பாத தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளாத கொள்கைகளையும் கோட்பாடுகளையும் திணிக்க நினைக்கின்ற ஒன்றிய பாஜக அரசு அதனை தமிழ்நாட்டு மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் வஞ்சிக்கின்ற ஒரு சூழ்நிலையை தொடர்ந்து மோடி அரசு, பா.ஜ.க. அரசு செய்து வருகின்றது. இந்த நிலைகளை நாட்டு மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

தமிழர்கள் ஏமாளிகளல்ல!

நம்முடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பொறுப்பேற்று மூன்றரை ஆண்டுகளில் பல்வேறு வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்களை செயல்படுத்தி இருக்கின்றார்கள். ஒட்டுமொத்தமாக இந்தியா முழுவதும் வசூலிக்கக்கூடிய அந்த ஜி.எஸ்.டி. வரியில் தமிழ்நாட்டினுடைய பங்கு ஏறத்தாழ 9 விழுக்காடு. நம்முடைய பங்கு ஒன்பது விழுக்காடு. ஆனால் பட்ஜெட்டில் தமிழ்நாடு என்ற வார்த்தையே இடம் பெறவில்லை. மோடி அரசு, பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டு மக்களை புறக்கணிக்கின்ற நிலையை தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றது. பா.ஜ.க.வினர் சிலபேர் மோடி வீடு, என்று சொல்லுவார்கள். அப்படி சொல்லும் பி.ஜே.பி. கட்சியினரே அந்த திட்டத்திற்கு நீங்கள் கொடுக்கிற நிதி வெறும் ஒன்றரை லட்சம். ஆனால் எங்களுடைய முதலமைச்சர் தங்க தலைவர் தளபதி அவர்கள் கொடுக்கின்ற நிதி 11 லட்சம். வெறும் ஒன்றரை லட்சத்தை கொடுத்து விட்டு மோடி வீடு என்று பெயர் வைத்துக்கொண்டு அந்த நிதியை உயர்த்துவதற்கு கூட உங்களுக்கு மனமில்லை. மதுரை எய்ம்ஸ் அறிவித்து அடிக்கல் நாட்டப்பட்டு இன்னும் கூட அவர்களால் ஒரு செங்கல்லை கூட எடுத்து வைக்க முடியாத நிலை இருக்கிறது. அதனோடு அறிவிக்கப்பட்ட மருத்துவமனைகள் எல்லாம் இப்பொழுது திறப்பு விழாவை கண்டிருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் அறிவிக்கப்பட்டு அடிக்கல் நாட்டினார்களே இது வரை இந்த பட்ஜெட்டில் கூட, எந்தவிதமான அறிவிப்புகளையும் வெளியிடவில்லை. ஒரு திருக்குறளை சொல்லிவிட்டால் தமிழ்நாட்டு மக்களை ஏமாற்றி விடலாம் என்று நிதி அமைச்சர் அவர்கள் தப்புக்கணக்கு போடுகிறார்கள். தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் ஏமாளிகள் அல்ல. நாட்டு மக்களுக்கு தெள்ளத் தெளிவாக தெரியும்.

பெருவெள்ளம் பேரிடருக்கு நாம் கேட்டது ரூ.45 ஆயிரம் கோடி. ஆனால் அவர்கள் ஒதுக்கியது வெறும் ரூ. 276 கோடி. இப்படி பேரிடர்களால் மக்கள் எல்லோரும் பாதிக்கப்பட்ட அந்த சூழலில் கூட ஒன்றிய அரசு நிதிளை ஒதுக்காமல் தமிழ்நாட்டை வசித்து வருகின்றனர். நூறு நாள் வேலைத் திட்டத்தை 150 நாட்களாக உயர்த்த வேண்டும் அவர்களுக்கு ஊதியம் உயர்வு வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தும் அது குறித்து எந்த வித அறிவிப்பும் இல்லை. ஆனால் அவர்கள் ஆளக்கூடிய மாநிலங்களுக்கான நிதிகள் கூடுதலாக இருக்கிறது. குறிப்பாக அதிகமான வரி செலுத்தக்கூடிய தமிழ்நாடு வஞ்சிக்கப்படுகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவச் செல்வங்கள் பெற்ற கல்வி கடனை 48 கோடி ரூபாய் அளவிற்கு தள்ளுபடி செய்து, மாணவ செல்வங்களுக்கான ஏழை மக்களுக்கான ஒரு நல்ல அரசை மு.க.ஸ்டாலின் அவர்கள் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்கள் அறிவித்த காவேரி, கிருஷ்ணா நதி இணைப்பு திட்டத்திற்கு ஒரு ரூபாய் கூட நிதி ஒதுக்கவில்லை. 2022-23 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருப்பது 2025 ஆம் ஆண்டு. ஆக ஒரு அரசு திட்டங்களை அறிவித்து விட்டு அதற்கான நிதிகளை ஒதுக்காமல் தேர்தல் வருகின்ற பொழுது ஏதோ தமிழ்நாட்டிற்கு நிறைய திட்டங்களை செயல்படுத்துவதைப் போல ஒன்றிய பா.ஜ.க. அரசு மக்களிடத்தில் ஒரு ஏமாற்று வேலை செய்து கொண்டிருக்கின்றது.

முட்டுக் கொடுக்கும் ஒன்றிய அரசு!

நாம் கேட்கின்றோம் அவர்களுக்கு செய்வதற்கு மனமில்லை. இருந்தபோதும் கூட தன்னை நம்பி வாக்களித்த தமிழ்நாட்டு மக்களை தாயுள்ளத்தோடு காப்பாற்றக்கூடிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நாம் நன்றி உணர்வோடு எண்ணிப்பார்க்க வேண்டும். பா.ஜ.க. அரசு தனி மெஜாரிட்டியில் இல்லை. அவர்களுக்கு ஆந்திராவும் பீகாரும் முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அதனால் தான் இரு மாநிலங்களுக்கு தேவையான நிதிகளை கூடுதலாக ஒதுக்குகின்றார்கள். அவர்களுக்கு ஒதுக்குங்கள் நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் எங்களுக்கு தேவையான திட்டங்களையும் நீங்கள் செயல்படுத்துங்கள் அதற்கான நிதிகளையும் வழங்குங்கள் என்று தான் முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்கின்றார்கள். இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய அரசு திராவிட மாடல் அரசு. எத்தனையோ திட்டங்கள் தமிழ்நாட்டில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் செயல்படுத்தக்கூடிய திட்டங்களை ஒன்றிய பா.ஜ.க. அரசு பல்வேறு மாநிலங்களில் தேர்தல் வாக்குறுதிகளாக கொடுத்து மக்களிடத்திலே எடுத்துச் சொல்கின்ற நிலையை உருவாக்கக்கூடிய அளவிற்கு தமிழ்நாட்டில் சிறப்பான திட்டங்களை செயல்படுத்தக்கூடிய முதலமைச்சர் தளபதி அவர்கள்.

திராவிட மாடலின் சிறப்பு திட்டங்கள்!

இந்த நேரத்தில் நாம் நன்றி உணர்வோடு என்னை பார்க்க வேண்டும். மகளிர் உரிமை திட்டம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய ஒரு மகத்தான திட்டம். நன்றி உணர்வோடு தாய்மார்கள் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அரசு மற்றும் உதவி பெறும் பள்ளியிலே படிக்கக்கூடிய மாணவச் செல்வங்களுக்கான காலை உணவு திட்டத்தை தமிழ்நாடு அரசினுடைய நிதியிலிருந்தே ஒரு ஏழை குடும்பத்தில் பிறந்த மாணவச் செல்வங்கள் காலையில் பள்ளிக்கு சாப்பிடாமல் செல்லக்கூடாது அவர்கள் பசியாற வேண்டும் என்பதற்காக காலை உணவு திட்டம் என்ற உன்னத திட்டத்தினை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நான் முதல்வன் மக்களை தேடி மருத்துவம் புதுமைப்பெண் தமிழ் புதல்வன் என பல்வேறு சிறப்பு திட்டங்களை நம்முடைய அரசினுடைய வருவாயைக் கொண்டே, செயல்படுத்தப்படுகிறது.

ரயில்வே திட்டங்களுக்கான மதுரை, கோவை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் இல்லை. இப்படிப்பட்ட சூழலை எல்லாம் அங்கே நாடாளுமன்றத்திலே நம்முடைய உறுப்பினர்கள் எடுத்துரைக்கின்றார்கள். அப்படியும் கூட ஒன்றிய அரசு செவிசாய்க்க மறுக்கிறது. இப்படிப்பட்ட ஒரு ஒன்றிய அரசுக்கு வரக்கூடிய தேர்தலில் நாம் சரியான பாடத்தை புகட்ட வேண்டும். என வேண்டுகோளாக கேட்டுக் கொண்டு 2014 -15 ஆம் ஆண்டு தொடங்கி 2022-23 ஆம் ஆண்டு வரை அரசு குறிப்பாக, தமிழ்நாட்டு மக்கள் ஒன்றிய அரசிற்கு செலுத்தி இருக்கக்கூடிய ஜிஎஸ்டி உள்ளிட்ட வரிகள் மொத்தமாக நாம் கணக்கிட்டு பார்த்தால் நேரடி வரி மட்டுமே 6,23,000 கோடி. நாம் 6,23,000 கோடி வரிகளை செலுத்தி இருக்கின்றோம். ஆனால் நமக்கு ஒதுக்கிய நிதி மிக குறைவு வெறும் 58 ஆயிரம் கோடியை மட்டுமே வழங்கிருக்கின்றது. ஆனால் உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு 2 லட்சத்து 55,000 கோடியை ஒதுக்கி இருக்கின்றார்கள். அதிக வரி செலுத்துகின்ற தமிழ்நாட்டிற்கு குறைந்த நிதி குறைந்த வரி செலுத்துகின்ற உத்தரபிரதேசத்திற்கு அதிகம். தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம் ஆந்திரா, தெலுங்கானா என ஒட்டு மொத்தமாக தென்னிந்திய மாநிலங்களையும் சேர்த்தால் கூட உத்திரப்பிரதேசத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையைவிட குறைவு தான் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திருக்குறளை வாசித்தால் மட்டும் போதுமா?

தமிழ்நாட்டு மக்கள் விரும்பாத மொழியையும் கொள்கைகளையும் திணிப்பதில் காட்டக்கூடிய ஆர்வத்தை ஒன்றிய அரசு நிதி ஒதுக்குவதில் காட்டவில்லை. ஒரு திருக்குறளை மட்டுமே மேற்கோள் காட்டி உரையை வாசித்து விட்டு தமிழ்நாட்டை ஒட்டுமொத்தமாக புறக்கணித்திருக்கிறது

ஒன்றிய பா.ஜ.க. அரசு என்பதை இந்த நேரத்தில் நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். அரசு பேருந்துகளிலே கட்டணம் இல்லாத பயணம் என்று விடியல் பயணத்திட்டத்தை தந்து நம்மை காக்கின்ற முதலமைச்சர் வழியில் நம்முடைய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு தலைநகராக மாற்ற வேண்டும். அதோடு சிறப்பு திட்டங்களை உரிய காலத்தில் சென்றடைய வேண்டுமென்று மிக சிறப்பான கவனம் செலுத்தி செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தில் விடுபட்டவர்களுக்கு அந்த தொகைகளை 3 மாதத்தில் வழங்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்திற்கு வளர்ச்சித் திட்டங்கள்!

முதலமைச்சர் அவர்கள் நம்முடைய கரூர் மாவட்டத்திற்கு ஏறத்தாழ ரூ.3 ஆயிரம் கோடி அளவிற்கான வளர்ச்சி திட்டங்களையும் நலத்திட்டங்களையும் வழங்கி இருக்கின்றார்கள். அரவக்குறிச்சி பகுதியில் ஒரு அரசு கலைக்கல்லூரி, ஆட்சி பொறுப்பு ஏற்ற முதல் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது . கோவை நான்கு வழி சாலை ரூ.137 கோடி மதிப்பீட்டில் பணிகள் மிக வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன. அதோடு மட்டுமல்ல பல்வேறு துணை மின் நிலையங்கள் அரவக்குறிச்சி பகுதியில் ஐந்து ஏக்கர் பரப்பளவில் மிகப்பிரமாண்டமாக முருங்கை பார்க். அமைய இருக்கிறது. இன்னும் ஏராளமான திட்டங்கள் ஏறத்தாழ மாவட்டத்தில் குறிப்பாக 400 கோடி ரூபாய் அளவிற்கு சாலைகள் அமைப்பதற்கான சிறப்பு நிதிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கி பல்வேறு சாலைகள் இன்று புதுப் பொலிவுடன் அமைக்கப்பட்டு வருகின்றன. விடுபட்ட சாலைகளும் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்பட்டு இன்னும் 6 மாத காலத்தில் முழுவதுமாக புதிய சாலைகளாக புதுப் பொலிவுடன் அமைக்கப்படும். பள்ளப்பட்டியில் அரசு மருத்துவமனை 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருகின்றன. குடகனாறு அணையில் இருந்து வலதுபுற பிரதான கால்வாய் ரூ.75 கோடி மதிப்பீட்டில் அகலப்படுத்துகின்ற பணிகளுக்கு நிதிகளை கொடுத்து அந்த பணிகள் மிக விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன .

ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களையே புறக்கணித்து இருக்கின்ற பா.ஜ.க.வை ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களும் எந்த காலத்திலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பா.ஜ.க. தமிழக மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஒரு கட்சி என்பதை தமிழ்நாட்டு மக்கள் தொடர்ந்து உணர்த்திக் கொண்டிருக்கின்றார்கள். இனி வரக்கூடிய நாட்களிலும் அதை பாஜகவினர் உணர்வார்கள். வரக்கூடிய சட்டமன்றத் தேர்தலிலும் நம்முடைய பகுதி மக்கள் உறுதுணையாக இருந்திட வேண்டும் உதயசூரியன் சின்னத்திலே வாக்களித்து ஒரு மகத்தான வெற்றி படைத்திட வேண்டும். இன்னும் என்ன தேவை இருக்கிறது அதை முழுமையாக நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் நிறைவேற்றி தருவார்கள் என்ற உறுதியை அன்போடு தெரிவித்து இந்த பிரம்மாண்ட கூட்டத்தை ஏற்பாடு செய்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர், அவரோடு இணைந்து பணியாற்றி இருக்க கூடிய ஒன்றிய, நகர செயலாளர்கள் நிர்வாகிகளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் .இவ்வாறு அமைச்சர் செந்தில் பாலாஜி பேசினார்.

மாவட்டக் கழகப் பொருளாளர் பிவி.பாரத் நன்றியுரை கூறினார்.

சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று முன்தினம் (10.02.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் நடைபெற்ற "பொங்கல் உழவும் மரபும்" கலைப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் . வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருப்பூர் தெற்கு மாவட்டம், மூலனூர் தெற்கு ஒன்றிய அ.தி.மு.க எம்.ஜி.ஆர் இளைஞர் அணி இணைச் செயலாளர் க.சதீஷ் அக்கட்சியில் இருந்து விலகி திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தார். இதில் மூலனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் துரை.தமிழரசு, பேரூராட்சி தலைவர், பேரூர் செயலாளர் மக்கள் க.தெண்டபாணி, மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர் ராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.

தமிழ்நாடு மருந்து வணிகர் சங்கத்தின் பொதுக்குழு கூட்டம் தமிழ்நாடு மருந்து வணிகர் சங்கத்தின் பொதுச்செயலாளர் கே.கே.செல்வன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மருந்து கட்டுப்பாட்டு துறை இயக்குனராக மீண்டும் மருந்தியல் படித்த அலுவலரை நியமனம் செய்ய உத்தரவிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும் தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டு துறை இயக்குனர் எம்.ஸ்ரீதர் கலந்து கொண்டு போதை விழிப்புணர்வு குறித்து விளக்கிப் பேசினார். கூட்டத்தில் தமிழ்நாடு மருந்து கட்டுப்பாட்டு துறை இணை இயக்குனர் கார்த்திகேயன், துணை இயக்குனர் இளங்கோ, உதவி இயக்குனர்கள் ராம் பிரபு, மாரிமுத்து, சதீஷ், அதியமான், குரு, பார்வதி, பொருளாளர் என்.ஆர்.பி.அன்பழகன், ஈரோடு மாவட்ட தலைவர் ஆர்.துரைசாமி, செயலாளர் செந்தில்குமார், பொருளாளர் வி.முருகேசன், குத்தூஸ் ஜியாபுதீன், மெடிக்கல் சங்கரன், புருஷோத்தமன், காளியண்ணன் உள்ளிட்ட மருத்து கட்டுப்பாட்டு துறை ஆய்வாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

ஈரோடு வடக்கு மாவட்டம் அந்தியூரில் கழகத்தின் சார்பில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழகத்துக்கு நிதி ஒதுக்காமல் தமிழக மக்களை பாஜக அரசு வஞ்சிப்பதை குறித்து நடைபெற்ற பொதுக்கூட்டம் ஈரோடு வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் என்.நல்லசிவம்தலைமையில் அந்தியூர் சட்டப்பேரவை தொகுதி பார்வையாளர் சி.காசி முன்னிலையில் பேரூர் கழக செயலாளர் எஸ்.கே.காளிதாஸ் வரவேற்பில் நடைபெற்றது. அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாநில மாணவரணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல், கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பெருநற்கிள்ளி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் கழக நெசவாளர் அணி செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், அம்மாபேட்டை ஒன்றிய கழக செயலாளர் கே.எஸ்.சரவணன், அத்தாணி பேரூர் செயலாளர் ஏ.ஜி.எஸ்.செந்தில்கணேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.